# பன்னிரெண்டு உளவாளிகள் (எண் 13:14)

சில நேரங்களில் நாம் அனைவரும் பரிசுப் பொருட்களை நம் அன்பான பெற்றோரிடமிருந்தும் மற்றும் நண்பர்களிடத்திலும் பெற்றுக் கொள்கிறோம். பரிசுப் பொருளானாது நாம் நமக்கே வாங்கி கொள்ள முடியாதது என விவரிக்கப்படுகிறது. அந்தப் பரிசுப் பொருளை திறந்து பார்த்து அதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிப்பது தான் முதல் சந்தோஷமாகும். அதன் உண்மையான மதிப்பை நாம் பிறகு தான் உணர்ந்து கொள்வோம்.

தூரத்திலிருந்து ஒரு பரிசுப் பொருளை கண்டிருந்தும் அதை நம்மால் சுதந்தரித்துக் கொள்ள முடியவில்லை என்பது எத்தகைய வேதனைக்குரிய காரியம்! இன்றைய பாடத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்கு பரமபிதா தேசத்தை கொடுத்திருந்ததை அவர்கள் கண்டிருந்தும்,உண்மையிலேயே தாங்கள் பெற்றுக் கொள்வோம் என்பதை நம்ப மறுத்து விட்டனர்.

கானானின் எல்லைப் பகுதியிலுள்ள காதேசிற்கு இஸ்ரவேலர்கள் வந்தடைந்த போது,கர்த்தர் மோசேயை நோக்கி ‘தேசத்தை சுற்றிப் பார்க்க,ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருவராக பன்னிரண்டு பிரபுக்களை அனுப்பு என்றார். உடனே மோசே புருஷர்களை தேர்ந்தெடுத்து பாரான் வனாந்திரத்திலிருந்து மலைகள் வழியாக கானான் தேசத்திற்கு செல்லுங்கள் என்று அவர்களிடம் சொன்னான்.

மோசே அவர்களிடம் அந்தத் தேசத்தின் ஜனங்கள் மண்வளம்,பட்டணங்கள்,மரங்கள் மற்றும் இப்படி பலவற்றை குறித்து செய்திகளை கொண்டு வரும்படி அனுப்பினான். மேலும் அங்கு விளையும் பழங்களில் சிலவற்றை கொண்டு வரும்படி வலியுறுத்தினான். அந்தப் புருஷர்கள் 400 கிமீ (250 மைல்கள்) தெற்கு முனையிலிருந்து ரேகாப் மட்டும் பயணித்து,மறுபடியும் அங்கிருந்து திரும்பி வர 40 நாட்கள் ஆனது.

அவர்கள் திரும்பும் போது,இரண்டு பேர் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக் கொடியை ஒரு தடியிலே கட்டித் தூக்கிக் கொண்டு வந்தார்கள். மேலும் மாதுளம் பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் எஸ்கோல் பள்ளத்தாக்குகளிலிருந்து கொண்டு வந்தார்கள். அவர்கள் தங்கள் அறிக்கையை கொடுத்த போது அந்த புருஷர்களில் பத்து பேர், ’நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு

நாங்கள் போய் வந்தோம். அது பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்பது மெய் தான். ஆனாலும் அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்,பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது" என்று கூறினர்.

அவர்கள் அந்த தேசத்தை குறித்து அதிகமான எதிர்மறையான காரியங்களை விசுவாச குறைவோடு கூறியதால் அது ஜனங்களை பயமுறுத்தி சோர்ந்து போக செய்தது.

ஆனால் அவர்களில் இரண்டு பேராகிய காலேப்பும், யோசுவாவும் அந்த தேசத்தை பற்றி நேர்மறையான கருத்தைக் விளக்கி கூறினார்கள். பத்து பேரையும் அமைதிப்படுத்தி ''நாம் உடனே போய் அந்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்'' என்றார்கள்.

மீதியான பத்து பேரோ " அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது. அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பெரியவர்கள் மற்றும் பலவான்கள். நாங்கள் எங்கள் பார்வையில் வெட்டுக்கிளிகளைப் போல இருந்தோம். அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம்" என மறுத்து தாங்கள் சுற்றிப் பார்த்த தேசத்தைக் குறித்துத் துர்ச் செய்தி பரவ செய்தார்கள்.

இஸ்ரவேலர்கள் மிகவும் பயந்து அந்தத் துர்ச் செய்தியைக் கேட்டதினிமித்தம் அழுது கூக்குரலிட்டுப் புலம்பினார்கள். கர்த்தர் செய்த எல்லா அற்புதங்களையும் மறந்து அவர் கிருபையையும் நஷ்டப்படுத்தினார்கள்.

அவர்கள் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக ''எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும். இந்த வனாந்திரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்! நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும்,எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும் படிக்கும். கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? நாங்கள் புதியத் தலைவரை எங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டு இந்த எகிப்துக்குத் திரும்பிப் போகிறதே எங்களுக்கு உத்தமம்'' என்று முறுமுறுத்தார்கள்.

அப்பொழுது மோசேயும்,ஆரோனும் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்.

யோசுவாவும் காலேப்பும்,தங்கள் வஸ்திரங்களைக் கிழித்து கொண்டு,அழுது கொண்டே ஜனங்களுக்கு முன்பாக ஓடி, “நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால்,அந்த தேசத்திலே நம்மைக் கொண்டு போய்,பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள். அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள். அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று கர்த்தர் நம்மோடே இருக்கிறார்!” என்றார்கள் (எண் 14:6-9).

அப்பொழுது, இவர்கள் மேலும் கல்லெறிய வேண்டும் என்று சபையார் எல்லாரும் சொல்லிக் கொண்டிருக்கையில்,கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்து இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது.

கர்த்தர் மோசேயை நோக்கி, “எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள். தங்களுக்குள்ளே எகிப்திலே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும்,எது வரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளை நோயினால் வாதித்து,சுதந்திரத்துக்குப் புறம்பாக்கிப் போட்டு,அவர்களைப் பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்” என்றார்.

மறுபடியும் மோசே ஜனங்களுக்காகப் பரிந்து பேசினான். “இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால்,அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கண்டும், அவர்கள் நடுவில் உம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி எகிப்திலிருந்து அவர்களைக் கொண்டு வந்தும், கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டு போய் விடக்கூடாதே போனபடியினால்,அவர்களை வனாந்திரத்திலே கொன்று போட்டார் என்று சொல்வார்கள்.

அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து உம்முடைய வல்லமையை பெரிதாய் விளங்கப் பண்ணும் 'கர்த்தர் நீடிய சாந்தமும்,மிகுந்த கிருபையும் உள்ளவர் என்றும்,அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர்' என்றும் மறுபடியாக அவர்களுக்கு காண்பியும்" என்றான்.

அப்பொழுது கர்த்தர், "உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்" என்றார். ஆனாலும் "என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்திரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும்,என் சத்தத்துக்குச் செவிகொடாமல் இதனோடே 10 முறை என்னைப் பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும்,அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்.

இந்த பொல்லாத சபையாரை நான் மறுபடியாக வனாந்திரத்துக்கு அனுப்புவேன். அங்கே வனாந்திரத்திலே பிரேதங்களாக விழுந்து தீரு மட்டும் அவர்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக,நாற்பது வருஷம் தங்கள் அக்கிரமங்களைச் சுமந்து தீர்ப்பார்கள்" என்றார்.

உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்கள் யாவரும் தேசத்தைக் காண மாட்டார்கள். காலேபும் யோசுவாவையும் தவிர மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. அவர்கள் என்னை உத்தமமாய் பின்பற்றினபடியால் அவர்கள் கானான் தேசத்திற்குச் செல்வார்கள்.

இந்த ஜனங்கள் அவர்கள் பிள்ளைகளுக்காய் வருத்தப்படுவதினால்,நான் அவர்களின் பிள்ளைகளை எந்த தேசத்தை அவர்கள் மறுதலித்தார்களோ அந்த தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக,அவர்களுக்குக் கொடுப்பேன் என்றார்.

தேசத்தை பற்றி துர்ச்செய்தியைக் கொண்டு வந்த அந்த பத்து புருஷர்கள் வாதையினால் அடிக்கப்பட்டு இறந்து போனார்கள். சபையார் எலலோரும் மிகவும் துக்கித்தார்கள்.

அதிகாலைலேயிலேயே ஜனங்கள் எழுந்திருந்து, "நாங்கள் பாவஞ் செய்தோம். கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின இடத்திற்கு நாங்கள் போவோம்" என்றார்கள்.

மோசே, அவர்களை நோக்கி, “நீங்கள் இப்படிக் கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. கர்த்தர் உங்கள் நடுவில் இல்லாததினால் நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப் போகாதிருங்கள். நீங்கள் உங்கள் எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டு,பட்டயத்தினால் விழுவீர்கள்” என்றான்.

ஆனால் ஜனங்களோ அகம்பாவத்தினாலும் பெருமையினாலும், கர்த்தரின் சித்தத்திற்கு மாறாக மலையின் உச்சியில் உள்ள கானான் தேசத்திற்கு ஏறத் துணிந்தார்கள் மோசே சொன்னபடியே, அமலேக்கியராலும் கானானியராலும் அடிக்கப்பட்டு முறிந்து விழுந்தார்கள். நிறைய ஜனங்கள் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் அவமானப்பட்டு துரத்தப்பட்டனர்.

இஸ்ரவேல் ஜனங்கள் திரும்ப வனாந்திரத்துக்கு திரும்பி அங்கே 40 ஆண்டுகள் காலம் வரையிலும் தங்கியிருந்தார்கள். எகிப்திலிருந்து வந்த இருபது வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் வனாந்திரத்திலே இறந்தனர். யோசுவா மற்றும் காலேப் மாத்திரம் கர்த்தருடைய விஷேசமான ஆவியைப் பெற்றவர்களாய் அவரையே நம்பி இருந்ததால் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தனர்.

கர்த்தர் அவர்களோடே இருந்து தன் ஊழியக்காரனாகிய மோசே மூலம் அவர்களை வழிநடத்தினார். அவர்கள் வஸ்திரங்களும் பாதரட்சைகளும் பழமையாகி போகவில்லை. தேவன் அன்றன்றைக்குள்ள ஆகாரத்தையும் அவர்களுக்கு அளித்தார்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது ஏனென்றால் கர்த்தரின் ஜனங்கள் விசுவாசத்தில் குறைவுபட்டால் கர்த்தருடைய ஆசிர்வாதங்கள் தாமதிக்கக் கூடும் என்பதை நமக்கு விளக்குகிறது.

சபைகளின் பெரும்பான்மையான கருத்துக்கள் சரியாக இருப்பதில்லை அல்லது அவைகள் கர்த்தரை சந்தோஷப்படுத்துவதாக இருப்பதில்லை.

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் வினாக்களுக்கு பதில் அளிக்கவும்.

1. 12 நபர்கள் கானான் தேசத்திற்குச் சென்றது ஏன்? (6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)

‘கர்த்தர் மோசேயிடம், ’அவர்களை தேசத்தைச் சுற்றிப் பார்க்க அனுப்பி விடு என கூறினார் ‘‘ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. பத்து புருஷர்கள் கொண்டு வந்த துர்ச் செய்தியை கேட்டவுடன் ஜனங்கள் என்ன செய்தார்கள்? (6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)

   ‘இஸ்ரவேலர்கள் பயந்து, இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அழுது கூக்குரலிட்டுப் புலம்பினார்கள் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. கர்த்தரை விசுவாசித்து அவருடைய கட்டளைகளின்படி ஜனங்களை உற்சாகப்படுத்தியது யார்? (6 நொடிகள் தாமதத்திற்கு பிறகு)

   ‘காலேப் மற்றும் யோசுவா என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. தன்னுடைய கானான் தேசத்தை கொடுப்பேன் என்ற கர்த்தரின் வல்லமையான வாக்குத்தத்தை விசுவாசிக்காததன் முடிவு என்ன? ( 6 நொடிகள் தாமத்திற்கு பிறகு)

   ’20 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் அனைவரும் கானான் தேசத்தைக் காணவில்லை என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடத்தை பற்றி கேட்டிராத யாரிடமாவது இதைக்குறித்து சொல்லுங்கள். சொல்லி முடித்த பின்பு அவர்களிடம் ‘இன்றைய விசுவாசிகளுக்கு இந்த பாடம் சொல்கின்ற முக்கியமான சத்தியமாக நீங்கள் பார்ப்பது எது? என்று கேளுங்கள்.

அவர்களின் பதில்களை கலந்தாலோசியுங்கள். அல்லது நம்முடைய கடினமான சூழ்நிலையிலும் நாம் செய்ய வேண்டிய காரியம் கர்த்தரை நம்புவது தான் என்று ஆலோசனை சொல்லுங்கள்.

சபையில் இருக்கும் பெரும்பான்மையான விசுவாசிகளுக்கு இன்றும் வித்தியாசமான கருத்துக்கள் தான் இருக்கின்றன.

புாடம் முடிந்தது